இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1992 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை முன்னாட் படையாட்கள் கழகம் (திருத்தச்) சட்டம்

*(1992, ஆகஸ்ட் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

*1992, ஆகஸ்ட் மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 — தபாற் செலவு : ரூபா 1.00

## 1992 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை முன்னாட் படையாட்கள் கழகம் (திருத்தச்) சட்டம்.

[1992, ஆகஸ்ட் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 78/90

**1976 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கை முன்னாட் படையாட்கள் கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை முன்னாட் படையாட்கள் கழகம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1976 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, இலங்கை முன்னாட் படையாட்கள் கழகச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 1976 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "முன்னேற்றுதலும் ஊக்குவித்தலும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "முன்னேற்றுதலும் ஊக்குவித்தலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் "நடாத்துதலும் முகாமை செய்தலும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "நடாத்துதலும் முகாமை செய்தலும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(எ) இலங்கையைப் பாதுகாப்பதில் அவர்களது உயிர்களைத் தியாகம் செய்த படையாட்களின் நினைவைப் பேணிப் பாதுகாத்தலும்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் பெரும்பான்மை வாக்குக்கொண்டு, கூட்டுத்தாபனமானது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பொதுப் பேரவையினது ஆண்டுக் கூட்டமொன்றில் அல்லது சிறப்புக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினரின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குப் பெரும்பான்மை கொண்டு பொதுப் பேரவையானது இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இசைவில்லாதனவாக அல்லாத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பொதுப் பேரவையின் ஆண்டுக் கூட்டமொன்றில் அல்லது சிறப்புக் கூட்டமொன்றில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அதன் 27 ஆம் விதியை நீக்கிவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,8[illegible]. ஒவ்வோராண்டு டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், 255, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.